**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
வள்ளியூர்

2024 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் புரட்டாசி மாதம் 29-ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண்.02/2024 ன் அ.வ.எண்.61/2022

ஸ்ரீமதி ... மனுதாரர் / வாதி

/எதிர்/

நல்லப்பெருமாள் ... எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனுவானது 23.09.2024 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E. இருளப்பன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சகாதேவன் ஐயர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் மனுவில் கண்ட சீர்திருத்த விவரப்படி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.10.15 17:29:24 +0530

1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-</u>

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை ஆறுமுக பெருமாள் நாடார் 30.01.1997 தேதியிட்ட வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.107/97 ன் மூலம் முத்து வாதிரியார் குமாரர்கள் 1) ராமசாமி வாதிரியார், 2) காருடையார், 3) வெள்ளைகண் வாதிரியார் மனைவி அசோதை ஆகியோரிடம் கிரையம் பெற்றதாகவும் அதன்பின் அப்பாவு நாடார் மகன் ஆறுமுகப்பெருமாள் நாடார் என்பவர் கடந்த 04.05.1998 ல் வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.584/1998 மூலம் இந்த எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணத்தின் மூலம் இந்த எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளார். மேற்படி ராமசாமி வாதிரியார் எக்காலத்திலும் சொத்தை ஆறுமுகபெருமாள் நாடாருக்கு எழுதிக்கொடுக்கவில்லை. மேலும், ஆறுமுகப்பெருமாள் நாடார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பம் ராமசாமி வாதிரியார் கைகெயாப்பம் இல்லை. மேற்படி ஆவணங்கள் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். எனவே, மேற்படி பிரதிவாதிக்கு ஆறுமுக நாடார் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் ஆவணம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோர வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ளபடி அசல் வழக்கில் திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.10.15 17:29:38 +0530

2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வழக்கு தபசில் சொத்து நாளது தேதிவரை இந்த எதிர்மனுதாரரின் அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருகின்றது. மனுதாரரின் கோரிக்கை காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்மனுதாரர் 04.05.1998 ல் கிரையம் பெற்ற நாள் முதல் யாவரும் அறிய ஆண்டு அனுபவம் செய்து வருகிறார். அதனை ஊர்ஜிதம் செய்யும் விதமாக வருவாய் ஆவணங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மனுதாரரின் கணவர் ஏற்படுத்திய உயில் ஆவணம் மோசடியானது. அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கை சீர்திருத்தம் செய்தால் வழக்கு மூலம் முற்றிலும் மாறுபடும். தபசில் சொத்தின் மதிப்பு சம்பந்தமாக மனுதாரர் எந்தவிதமான சான்றும் தாக்கல் செய்யவில்லை. தபசில் சொத்தின் மதிப்பு தற்போது மூன்று லட்சத்திற்கு மேல் ஆகும். இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பிற்குட்பட்டதல்ல. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை ஆறுமுக பெருமாள் நாடார் 30.01.1997 தேதியிட்ட வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.107/97 ன் மூலம் முத்து வாதிரியார் குமாரர்கள் 1) ராமசாமி வாதிரியார், 2) காருடையார், 3) வெள்ளைகண் வாதிரியார் மனைவி அசோதை ஆகியோரிடம் கிரையம் பெற்றதாகவும் அதன்பின் அப்பாவு நாடார் மகன் ஆறுமுகப்பெருமாள் நாடார் என்பவர் கடந்த 04.05.1998 ல் வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலக

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.10.15 17:29:47 +0530

ஆவண எண்.584/1998 மூலம் இந்த எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணத்தின் மூலம் இந்த எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளார். மேற்படி ராமசாமி வாதிரியார் எக்காலத்திலும் சொத்தை ஆறுமுகபெருமாள் நாடாருக்கு எழுதிக்கொடுக்கவில்லை. மேலும், ஆறுமுகப்பெருமாள் நாடார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பம் ராமசாமி வாதிரியார் கைகெயாப்பம் இல்லை. மேற்படி ஆவணங்கள் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். எனவே, மேற்படி பிரதிவாதிக்கு ஆறுமுக நாடார் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் ஆவணம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோர வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அது குறித் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும், மனுதாரரால் கூறப்படும் திருத்தத்தால் இவ்வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறபோவதில்லை. மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவானது அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.10.15 17:29:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை</u>

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.10.15 17:30:05 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வள்ளியூர்.**

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.02/2024 இன்

அ.வ.எண்.61/2022

தேதி.15.10.2024